விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 வைகாசி 23 ரம்ழா 15 இதழ் 115
யாழ்ப்பாணம் புதன்கிழமை 5-6-1985

## பலாலி முகாமிலிருந்து 40 இளைஞர் நேற்று விடுதலை!

(யாழ்ப்பாணம்)
பலாலி இராணுவ முகாமில் விசாரணைக்காகத் தடுத்துவைக்கப்பட்டிருந்த 40 இளைஞர்கள் நேற்று நண்பகல் விடுதலைசெய்யப்பட்டனர்.

விடுதலை செய்யப்பட்ட இளைஞர்களுள் தலைமன்னார்க் கடலில் வைத்துக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டவர்களும் அடங்குவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

பலாலி இராணுவ முகாமிலிருந்து வசாவிளான் சந்தி வரை நடந்துவந்த இவ்விளைஞர்கள், தங்கள் சொந்த ஊர்களுக்குச் செல்வதற்குப் பிரயாண வசதி இன்றி தத்தளித்தனர்.

தூர இடங்களுக்குச் செல்ல வேண்டிய இளைஞர்களுக்கு அப்பகுதியிலுள்ள பொதுமக்கள் நிதிசேர்த்துக்கொடுத்து மினிபஸ்ஸில் அனுப்பிவைத்ததாகக் கூறப்படுகிறது.

சில இளைஞர்களை அவரது உறவினர்கள் வந்து அழைத்துச் சென்றனர். (மா)

## வீதியோரத்தில் காணப்படும் இரு பொம்மைகள்

[யாழ்ப்பாணம்]
மதவாச்சியில் வீதி ஓரத்திலுள்ள இரு மின்கம்பங்களில் மனித உருவில் இரு பொம்மைகள் கட்டப்பட்ட நிலையில் காணப்படுகின்றன.

(6-ம் பக்கம் பார்க்க)

# பிற மாவட்டங்கள் உடனான யாழ். மாவட்ட பஸ் இணைப்புச்சேவை ரத்து!

## யாழ் — கொழும்பு தனியார் பஸ் சேவை இன்று நடைபெறாது

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கு மிடையே போக்குவரத்துச் சேவையிலீடுபட்டிருந்த தனியார் பஸ்கள் இன்று சேவையிலீடுபட மாட்டாதென்று அறியப்படுகிறது.

நேற்றுக் காலை அனுராதபுரத்துக்கும் மதவாச்சிக்கு மிடையில் ரம்பாவ என்னு

[6-ம் பக்கம் பார்க்க]

## பாதுகாப்பு கருதி வ. போ. ச. முடிவு

(யாழ்ப்பாணம்)
வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்கள் இன்று முதல் வேறு மாவட்டங்களுக்கான சேவையிலீடுபட மாட்டாதெனவும் அதே போன்று வேறுமாவட்டங்களிலுள்ள போக்குவரத்துச் சபையின் பஸ்கள் யாழ் மாவட்டத்துக்குள் வரமாட்டாதென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புக் காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

யாழ். மாவட்டத்துக்கும் திருகோணமலை, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், வவனியா மாவட்டங்களுக்கு மிடையே இதுவரை பஸ் சேவை நடைபெற்று வந்துள்ளது. இந்த சேவைகள் இனி நடைபெறமாட்டாது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை திருமலையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த பருத்தித்துறை டிப்போவைச் சேர்ந்த பஸ், பன்குளத்தில் வைத்துத் தடுத்து நிறுத்தப்பட்டு பிரயாணிகள் தாக்கப்பட்டதையடுத்தே மாவட்டங்களுக் கிடையேயான பஸ் சேவைகள் ரத்துச் செய்யப்பட்டதாகஅறியப்படுகின்றது. [க-மா]

## இந்தியாவில் நடத்திய பேச்சு பற்றி கட்சி எம். பிக்களுக்கு ஜனாதிபதி விளக்கம்

(கொழும்பு)
இந்தியாவிலிருந்து இலங்கைக்கு எதிராக மேற்கொள்ளப்படும் பயங்கரவாத நடவடிக்கைகளை தாங்கள் ஆதரிக்கப்போவதில்லை என்று இந்திய தலைவர்கள் தெரிவித்துள்ளதாக அரசாங்க பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் நேற்று உரையாற்றிய ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன தெரிவித்தார்.

இந்தியத் தலைவர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் அடிப்படையில் அரசாங்கம் அவசியமான நடவடிக்கை

[6ம் பக்கம் பார்க்க]

## கொழும்பு புறப்பட்ட பஸ்கள் யாவும் திரும்பின

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்திலிருந்து நேற்றுக் காலை கொழும்புக்குப் புறப்பட்ட சகல தனியார் பஸ்களும், வவனியாவுக்கு அப்பால் செல்லமுடியாமல் மீண்டும் நேற்று மாலை யாழ்.நகர் வந்து சேர்ந்தன.

நேற்றுக்காலை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் புறப்பட்ட பஸ்களில் ஒரு மினி பஸ் மட்டும் முன்கண்ணாடி உடைந்த நிலையில் நேற்று பிற்பகல் 4 மணிக்கு யாழ்ப்பாணம் வந்தடைந்தது.

மதவாச்சிக்கு சமீபத்தில்

(6-ம் பக்கம் பார்க்க)

## ரசாயனத் தொழிற்சாலை மூடப்பட்டபோதும் ஊழியருக்கு சம்பளம்

### சபையில் அமைச்சர் தகவல்

(கொழும்பு)
பரந்தன் ரசாயனத்தொழிற்சாலை தற்காலிகமாகவே மூடப்பட்டுள்ளது என்றும் நிலைமைகள் சீராகி மீண்டும் தொழிற்சாலை இயங்கமுடியும் என பாதுகாப்பு அதிகாரிகள் அறிவித்தால் மீளவும் தொழிற்சாலை திறக்கப்படும் என்றும்

[6ம் பக்கம் பார்க்க]

## ரஜீவ் 4 நாடுகளுக்கு இன்று புறப்படுகிறார்

[புதுடில்லி]
நான்குநாடுகளுக்கானவிஜயமொன்றை மேற்கொண்டு இந்தியப் பிரதமர் திரு. ரஜீவ் காந்தி இன்று புதுடில்லியை விட்டு புறப்படுகிறார்.

முதலாவதாகக் கெய்ரோவுக்கும் பின்னர் அல்ஜீரியா மற்றும் அமெரிக்காவிற்கும் அவர் செல்வார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா திரும்பமுன் ஜெனிவாவில் நடைபெறவுள்ள சர்வதேச தொழிலாளர் நல ஸ்தாபனத்தின் 71-வது கூட்டத் தொடரில் உரையாற்றுவார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

## போத்தல் விளக்கு வெளிச்சத்தில் நீதிமன்றம்

[யாழ்ப்பாணம்]
மின்சரத் தடை காரணமாக நேற்று யாழ் நீதிமன்றம், போத்தல் விளக்கு வெளிச்சத்தில் கூடியது.

யாழ் நீதிமன்ற நீதவான் எஸ். நாகராசா முன்னிலையில், நீதிமன்றம் கூடிய போது இரு சட்டத்தரணிகளும், 3 கட்சிக்காரர்கள் மட்டுமே வந்திருந்தனர். 10 நிமிடத்தில் நீதமன்ற நிகழ்ச்சிகள் முடிவுற்றன. [க]

## நெடுந்தீவு படகில் பலியான 32 பேரின் மரணங்கள் 'கொலை' எனத் தீர்ப்பு!

### விசாரணை செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவு!!

(யாழ்ப்பாணம்)
நெடுந்திவு படகில் நடந்த 32 பேரின் மரணங்கள் தனித்தனியாக ஒவ்வொன்றும் 'கொலை' எனத் தீர்ப்பு வழங்கிய, யாழ். மேலதிக நீதவான் கே பி எஸ் வரதராசா, விசாரணைசெய்து சம்பந்தப்பட்டவர்களை, சட்டத்தின்முன் நிறுத்துமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

நெடுந்தீவிலிருந்து கடந்த மாதம் 15ம் திகதி குறிக்கட்டுவான் சென்ற யந்திரப்படகில் பலியான 32பேரின் மரண விசாரணை முடிவடைந்து தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

[6-ம் பக்கம் பார்க்க]

## விண்ணப்பம் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)
யாழ். பதிவாளர் காரியாலயத்திலிருந்து தினமும் 500 பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் தபால் மூலம் அனுப்பப்பட்டுவருகிறது.

பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்திற்கு விண்ணப்பிப்போரி தொகை தினமும் அதிகரித்து வருவதால், பதிவுக் காரியாலயத்தில் விடுமுறை தினங்களிலும் வேலை துரிதமாக நடைபெற்றுவருகிறது. (க)

## சுவிஸில் உள்ள 400 தமிழர்கள் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படமாட்டார்கள்

[ஜெனிவா]
சுவிற்ஸ்ஸலாந்தில் அரசியல் அடைக்கலம் கோரியுள்ள 400 இலங்கைத் தமிழர்களையும் இலங்கைக்கு மீண்டும் திருப்பி அனுப்புவதில்லையென்று அந்த நாட்டு அரசு முடிவுசெய்துள்ளது.

முன்னர் இந்த 400 இலங்கைத் தமிழ் அகதிகளையும் மீண்டும் இலங்கைக்குத் திருப்பி அனுப்ப சுவிஸ் அரசு முடிவு செய்திருந்தது. இந்த முடிவுக்கு ஐ. நாடுகள் அகதிகள் கமிஷன் மற்றும் சர்வதேச ஸ்தாபனங்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தமையைத் தொடர்ந்து அவர்களை மீண்டும் இலங்கைக்குத் திருப்பி அனுப்புவதில்லையென்ற முடிவு எடுக்கப்பட்டதாக சுவிற்ஸலாந்தின் அரச அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

## வவனியாவில் கடத்தப்பட்டவர்களை— நிபந்தனையின்றி விடுவிக்க பிரஜைகள்குழு கோரிக்கை

(வவனியா)
கடத்திச் செல்லப்பட்ட ஜி. ஈ. சோமரத்தினவையும் ஏழு பேரையும் எவ்வித நிபந்தனையுமின்றி உடன் விடுதலை செய்யுமாறு வவனியா பிரஜைகள் குழுத்தலைவர்சட்டத்தரணி வி. எம். எக்ஸ். சொர்ணபால வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(6ம் பக்கம் பார்க்க)

## அனுராதபுரத்தில் பலியான ரயில் சாரதிக்கு அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

அநுராதபுரம் புகையிரத நிலையத்தில் கொலை செய்யப்பட்ட ரயில் சாரதியான ஏழாலையைச் சேர்ந்த சின்னையா சிவதாசன் என்பவருக்கு அனுதாபம் தெரிவித்து கட்டுவன் தெற்கு-ஏழாலை வடக்கு பாரதி சனசமூக நிலையம் அஞ்சலிக் கூட்டமொன்றை நடாத்தியது.

திரு எம். தருமமூர்த்தி தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது.

அண்மைக் காலத்தில் இடம் பெற்ற உயிரிழப்புக்களுக்கு இரு நிமிட மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது. (மா)


## விளம்பரம்

### விற்பனைக்கு

யாழ் சபாபதி வீதியில், பிரதானவீதி, பல்கலைகழகம், தொழில் நுட்ப கல்லூரி, புகையிரதநிலையம் ஆகியவற்றிற்கு மிக அண்மையில் இரண்டு பரப்பு காணி கிணறு இரு அறையுடன் வீடு விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு செல்வி க. நிற்ரா, மே/பா இ சுப்பையா, ஸ்ரேசன்ரோட், மல்லாகம். 3620

யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் 1 பரப்புக்காணியில் சகல வசதிகளையும் கொண்ட புதிய வீடு விற்பனைக்குண்டு. 166/2 நாவலர்வீதி, யாழ்ப்பாணம். 3628

சங்கு வேலியில், வீடு, கிணறு மற்றும் வசதிகளுடன் 6½ பரப்பு காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: T. ஜெயராசா, அருளானந்தம் ஒழுங்கை, சங்குவேலி, மானிப்பாய். 3613

கிளிநொச்சி 7-ம் வாய்க்காலில் இருபோக நெற்காணி (10 ஏக்கர்) உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு க யோகேந்திரன், C/o ச. நாகேந்திரன், முருகமூர்த்தி கோவிலடி, நவாலி தெற்கு, மானிப்பாய். 3619

சுண்டிக்குளி மகளிர் பாடசாலைக்கு அருகாமையில் சகல வசதிகளுடன் வீடும் காணியும் விற்பனைக்குண்டு தொடர்பு: பைலட் இன்ஸ்ரியூட், 151, செம்மணி றோட், நல்லூர். 3617

V. W கார் EL சீரீஸ் (ரூபா 6000/-), முகக்கண்ணாடி அலுமாரி (ரூபா 4500/-), T V. செற் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: பைலட் இன்ஸ்ரியூட், 151, செம்மணி றோட், நல்லூர். 3617

வீட்டுத் தோட்டப்பாவனைக்கேற்ற யூரியா உரவகைகள்:- மரக்கறி, விசேஷபூக்கள், வாழை, அன்னாசி, தோடை, எலுமிச்சை, மிளகாய், தென்னை, ரோசா, சப்பாத்திப்பூ ஏனையவற்றிற்கும் விற்பனைக்குண்டு M. G M And Stores, 777, கே. கே. எஸ். வீதி. And 208 முதலாம் குறுக்கு தெரு, யாழ்ப்பாணம் போன்:-22611. 3591

சுதுமலை அம்மன் கோவிலுக்கு அருகாமையில் 1½ பரப்பு காணியும், வீடும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி S. சின்னப்பு, சுதுமலை மேற்கு, மானிப்பாய். 3531

### தேவை

யாழ். மாநகர எல்லைக்குள் தொலைபேசி வசதி மற்றும் வாகனங்கள் நிறுத்தக் கூடிய பல அறைகளுடன் கூடிய பெரிய வீடு நிறுவனம் ஒன்றுக்கு உடன் தேவை 12-6-85 க்கு முன் விண்ணப்பிக்கவும். இல: 3624 C/o ஈழநாடு. யாழ்ப்பாணம். 3624



## Uduvil Girls' Collge Announces its Prize-Day

on

SATURDAY THE EIGHT OF JUNE, 1985

at

9-00 a. m. IN THE COLLEGE HALL

The Principal Staff and Students invite Parents, past Pupils and Well-Wishers to the Celebration

Chief Guests:

**The Rt. Rev. D. J. Ambalavanar,**
**Dr. Mrs. C. Ambalavanar**

3626


## முதலாம்வருட நினைவஞ்சலி

### க. மாணிக்கம்

முன்னாள் உரிமையாளர்
ராஜா பிரம்புத் தொழிற்சாலை,
286, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.



மலர்வு: 29-03-1929

உதிர்வு: 16-06-1984

திதி: 05-06-1985

அன்புடனும், பாசத்துடனும் வாழ்ந்து எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டுத் திடீரென அணைந்துவிட்ட அன்புத் தெய்வமே நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும் உங்கள் நினைவு எம்மை என்றும் விட்டு நீங்காது உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

பிரிவால் துயருறும்:
அருமைமனைவி, மகன், உற்றார், உறவினர், நண்பர்கள்.
மா சண்முகராஜா, 37, மலர்மகள் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம். 3544


# JAFFNA COLLEGE TECHNICAL INSTITUTE

## VACANCIES

Dyn. Ads

The undermentioned vacancies exist in our teaching staff Suitable candidates should make their applications ON FORMS AVAILABLE AT OUR OFFICE to reach the DIRECTOR, JAFFNA COLLEGE TECHNICAL INSTITUTE, VADDUKODDAI before 15th June, 1985.

Successful candidates, who will be selected after an interview, will be expected to commence work by 1st July, 1985.

## VISITING LECTURERS

(a) BUILDING CONSTRUCTION TECHNOLOGY

(b) QUANTITY SURVEYING and DRAUGHTSMANSHIP

Candidates should possess a recognised Degree or Diploma in a related field. Practical experience of 3 years or more will be a definite advantage.

Remuneration: Rs. 50/- per hour (8—10 hours per week)

## INSTRUCTORS

(a) ELECTRONICS ENGINEERING

(b) COMPUTER PROGRAMMING

(c) ENGINEERING DRAWING

Candidates should have N D T or equivalent qualifications, preferably with practical experience of 2 years or more.

Salary: Rs. 1000/- — Rs. 1300/- per month (all inclusive)


## ஜெஹோவாவின் சாட்சி A. D. குணரத்தினம்

09-03-85ல் மறைந்த ஜெஹோவாவின் சாட்சி திரு. A. D குணரத்தினம் அவர்கள் தமது சமயக் கொள்கையில் உறுதியாக இருந்தார் என்றும், உண்மை, நேர்மை என்பவற்றைத் தமது உயிருக்கு மேலாக மதித்து இறுதிவரை இக்கொள்கையையே கடைப்பிடித்து மறைந்தார்.

கர்த்தர் கொடுத்தார். அவரே நடாத்திச் சென்றார். அவருக்கு ஸ்தோத்திரம்.

08-06-85 சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு தெல்லிப்பழையில் ஓர் ஆராதனை நடாத்தப்படும்.

மனைவி, பிள்ளை, சகோதர சகோதரிகள்,
மைத்துனர் மற்றும் உற்றார், உறவினர்.

டச் றோட்,
தெல்லிப்பழை,
5-6-85. (3625)

## 21-ம் வருட நினைவஞ்சலி

### திருமதி பொன்னுத்துரை (பிள்ளை) மகேஸ்வரி



மலர்வு: 11-05-1922

உதிர்வு: 11-05-1964

உங்கள் நினைவு எம் உள்ளங்களை விட்டகலாது.

கணவன்-மகன்மார் மகள்-மருமக்கள்-மருமகன்-பேரப்பிள்ளைகள்.

பாலா பான்சி கவுஸ்,
ஊர்காவற்றுறை.

3622

## முதலாவது சிரார்த்ததினம்

### த. தெய்வேந்திரம் (குட்டிராணி)

தோற்றம்: 12-08-56

மறைவு: 17-05-84



அன்பின் திருவுருவே நீயின்றி இன்று ஓராண்டு நிம்மதியின்றி கழிந்துவிட்டன. உன் நினைவுகள் என்றும் பசுமையில் இருக்க நாம் உன் நினைவில் வாடுகிறோம். நீங்கள் மறைந்து ஆண்டொன்று சென்றாலும் மங்காது என்றும் உம் நினைவுகள்.

தாய் சகோதர சகோதரிகள், மைத்துனர், மருமக்கள்.
கொம்மந்துறை, வல்வெட்டித்துறை. 3612

## 31ம் நாள் நினைவஞ்சலி

### இராசையா பரமேஸ்வரன்

(சொர்ணலட்சுமி தென்னந்தோட்ட உரிமையாளர், பளை.)

தோற்றம்: 26-03-1922

மறைவு: 06-05-1985



எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமகன், பேரன்

''கௌரி வாச'',
பொன்னாலை, சுழிபுரம். (3621)

## மணிவாக்கு

கீழே விழாதிருப்பது நமக்குப் பெரிய பெருமையல்ல. ஆனால் விழுந்தபோதெல்லாம் எழுந்திருப்பதே பெருமைக்கு உரியது.

— கன்ஃபூஷியஸ்

# நமது நோக்கு

## தமிழ்த்தேசியம்

பழைய இரும்பைப் புதியதாக்கலாம். இரும்பின் வடிவத்தை வேண்டியவாறு மாற்றிவிடலாம். உலையில் இட்டு உருக்குதல் ஒன்றே அதற்கெல்லாம் உற்ற உபாயம்.

மனிதன் தன்னைப் புதுப்பிக்கவும் தன் இயல்பை மாற்றவும் முடியும் பேருணர்ச்சி உள்ளத்தில்பொங்கியெழுந்து கொண்டிருந்தால் அதுவே இன்று எமக்குத் தேவைப்படும். தவமாகும்

அவ்வுணர்ச்சியினின்று தான் எண்ணிய நிலையை எய்துவது எளிதாகிறது.

தமிழ்மக்கள் பாதுகாப்புடனும் தன்மானத்துடனும் வாழ வழிகாண்பதே எங்கள் இன்றைய அவசர தேவை. போரால் இதனைப் பெறுவதில் நாம் பூரண நம்பிக்கைகொள்வதுபொருத்தமானதல்ல.

தவிர்க்க முடியாத கட்டத்தில் போரும் ஒரு வழி. அவ்வழியில் அளவற்ற அழிவை நாம் அனுபவித்திருக்கிறோம்; அதேசமயம் ஆண்மையுடன் போராடி எங்கள் கௌரவத்தை நிலைநாட்டவல்லோமென்பதும் தெளிவாயிற்று.

சமாதானத் தீர்வுக்கு சமாதானசூழ்நிலை உருவாக இந்தியா தொடர்ந்து உதவ முன்வந்திருப்பதால் அதனை நாம் எக்காரணம் கொண்டும் அலட்சியம் செய்யலாகாது.

நீண்டகால நோய்க்கு எந்த டாக்டர் எந்த மருந்து உதவியது என்று விவாதிப்பது மடமை. இன்று எமக்குக் கிடைப்பது மீனா, இறைச்சியா அல்லது கோழியா என்று கேட்பதற்குகாலம், இடம்எவ்விதத்திலும் அனுமதிக்காது

சுப்பற்ற படலையைச் சுற்றி, அதனை அனுவசியமாகத் தாக்கி, மீண்டும் அதனையே சுற்ற வேண்டிய நிர்ப்பந்தம் ஆட்சி அகங்காரத்தால் உண்டான வினை

அதனை நீக்கி, சமத்துவ புத்தியுடன் இங்கு வாழும் தமிழ் மக்கள் 'பயங்கரவாதிகள்' அல்ல என்ற உண்மையை உணர வேண்டும்; அவர்களைக் கொல்ல திரட்டிய படை ஒன்றும் தெரியாத இளம் அப்பாவிகள்; போரில் பயிற்சி பெறாத பச்சிளம் பாலகர் என்பதையும் ஒப்புக் கொள்ள வேண்டும் தமிழர் துவேசம் கற்பிக்கப்பட்டதால் துப்பாக்கியால் 'தமிழன்;' எவனையும் அவ்வுலகுக்கனுப்ப வேண்டிய கடமை தனதென்று ராணுவம் செயற்படுவதை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். எனவே ராணுவம் வெளியேற வேண்டும்.

இது பயங்கரவாதமல்ல; இதுதான்இன்றைய பிரச்னை அல்ல; மீசையில் மண் படவில்லையென்பதை நிரூபிக்க பல உத்திகள் வெளிவரும். மீசை இல்லையே எனவே மண் பட இடமில்லையே என்றுதான் இந்த மாயா சாலம் முடிவடையும்.

இந்த நாட்டில் வாழும் சிங்கள மக்களும் நாமும் அமைதியாக, ஒற்றுமையாக வாழவேண்டும்; வேற்றுமை மிகும் காலத்தில் பகைமை தானாகவே தலைக்கேறும்.

இந்தப் பகைமை எந்தக் கட்டத்தில் என்ன அழிவை ஏற்படுத்துமென்பது வரலாற்று நிபுணரோ, சமுதாயவியல் ஆராய்ச்சியாளரோ முன்கூட்டிச்சொல்ல முடியாத காரியம்.

அனுபவத்தில் நாம் கண்டதும் கேட்டதும் இன்றைய உலகில் எதிர்பாராதவாறு மாறிபிருப்பதை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

தமிழ் இளைஞர் போராட்டம் இதற்கு முக்கிய உதாரணம். ஆனால்எதிர்பாராத மாற்றம் என்ற வெள்ளத்தில் அள்ளுப்படும் பட்டாளத்தை அழிவிலிருந்துபாதுகாக்க வேண்டியது எமது அவசரகடமை.

ஆட்சியில் நம்பிக்கை இழந்து சிங்கள மக்களின் துவேஷம் அதிகரித்திருக்கும் வேளையில் எங்களுக்குத் துணை இந்திய அரசே. இந்திய அரசு, நாம் நினைத்ததை எல்லாம் ஒரு கோப்பையில் இட்டு கையளிக்க முடியாதென்பதை நாம் அறியவேண்டும்.

நாம் தமிழர் என்றும் வட இந்திய அரசு எமக்கு கருணைகாட்ட, முன்னிற்காதென்பதும்ஆதாரமற்ற அச்சம்

தென் இந்திய மாநிலங்கள் அனைத்தும் மத்திய அரசுக்கு; இலங்கைத் தமிழர் பிரச்னைக்கு தக்க முடிவு, தாமதமின்றிஎடுக்கவேண்டுமெனக் கேட்டிருக்கின்றன.

எனவே நாம் இன்றைய அபாயநிலையில், இந்தியாவின் வழிகாட்டலுக்கு அமைந்து; நாட்டில் அமைதிநிலவ நாம்வாழும் பகுதிகளில் பாரிய புனரமைப்பு வேலைகளில் ஈடுபட, எங்கள் இளைஞர் புத்துயிர்பெற்று புதுவாழ்வு காண ஆயுதப் போராட்டத்தை நிறுத்துவதுசாலப்பொருத்தமானது

'சுயநிர்ணயம்' என்ற கோட்பாடு மாநில ஆட்சியின் அமைப்பில் 'றெடிமேட்' முறையில் கிடைக்காது. அதனை அடையநாம் ஒற்றுமைப்பட்டு தமிழர்கள் இதுகாறும் பட்ட இன்னல்களை ஒழிப்பதே மூதல் முயற்சியாகும்.

## நீரூற்று சுத்திகரிப்பு

[ஊரெழு]

ஊரெழு கிராமத்திலுள்ள வற்றாத நீரூற்றான பொக்கணை நீரூற்றை திருத்தம்செய்து பாவனைக்கு உட்படுத்தும் வகையில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் ஊரெழு கலைவாணி சனசமூக நிலையத்தினர், கிராமத்திலுள்ள பொதுமக்களின் உதவியுடன் மேற்கொண்ட துப்பரவு செய்யும் பணி மீண்டும் தொடரவிருக்கிறது.

சிரமதானம் மூலம் மேற்படி நீரூற்றை மீளவும் சுத்திகரிப்பது என்று கலைவாணி சனசமூக நிலையத்தின் நிர்வாக சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# கொழும்புத் துறைமுகத்தில்

## பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது

### 24 மணிநேரமும் உஷார் நடவடிக்கை

[கொழும்பு]

கொழும்பு துறைமுகத்தின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

தற்போது 8 காவல்நிலையங்களைக் கொண்ட கொழும்பு துறைமுகத்தில் மேலும் 8 காவல்நிலையங்களை அமைக்குமாறு தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி உத்தரவிட்டுள்ளார்

பாதுகாப்பு நடவடிக்கைகளை இராணுவ, கடற்படை, விமானப்படை கூட்டாகக் கவனிக்கும். பாதுகாப்புக் குழுக்களும் அமைக்கப்பட்டு 24 மணிநேர பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்

துறைமுக பாதுகாப்பு நடவடிக்கைகளை இலங்கை துறைமுக அதிகாரசபை கவனித்து வருகிறது. (க)

## "எரிபொருள் கொண்டுவர தனியாரை அனுமதிக்குக!"

### அரசஅதிபருக்கு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு தனியார் எரிபொருள் கொண்டுசெல்வதற்கு அனுமதி வழங்குமாறு யாழ் பிரஜைகள் குழு கிராமியத் தொண்டர் படைத் தலைவர் திரு எஸ். ஏ பரம்சோதி, யாழ். அரசாங்க அதிபர் திரு எம். பஞ்சலிங்கத்திடம் கோரியுள்ளார்.

அரசாங்க அதிபருக்கு அவர் அனுப்பியுள்ள மகஜரில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:- "வெளிச் சந்தையில் பெற்றோல் ஒரு போத்தல் 35 ரூபாவாகவும், கலன் 157 ரூபா 50 சதமாகவும் விற்பனை செய்யப்படுகிறது பெற்றோலின் சாதாரண விலை கலன் 60 ரூபா 50 சதமாகும் பெற்றோல் ஒரு கலன் விலை 275 வீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

"வாகனப் பாவனைக்கு நியாயமான விலையில் எரிபொருள் கிடைக்கவேண்டும். யாழ் குடாநாட்டுக்கு 10 கலன் பெற்றோல், 10 கலன் டீசல், 10 கலன் மண்ணெண்ணெயை எவ்வித தலையீடுமின்றிக் கொண்டுவர அனுமதிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்". (க)

வடபகுதியில்——————

## போக்குவரத்து ஸ்தம்பிக்கும் நிலை!

(யாழ்ப்பாணம்)

"வடபகுதியில் எரிபொருள் இல்லாததினால், சகலபகுதியினரும், பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். எரிபொருள் விநியோகம் செய்ய உடன் நடவடிக்கை எடுக்கவும்."

இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர், ஜெயவர்த்தனாவுக்கு பருத்தித்துறை பிரஜைகள்குழுத் தலைவர் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் அனுப்பியுள்ள அவசர தந்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அத்தந்தியில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: "அநுராதபுரத்திலிருந்து யாழ்ப்பாணம் வரை எரிபொருள் கிடைப்பதில்லை. இதனால் இ. போ. ச. பஸ்சேவை ஸ்தம்பித்துள்ளது. தனிப்பட்ட வாகனச் சேவையும் பாதிப்படைந்துள்ளது. போக்குவரத்து இறுதிக் கட்டத்தையடைந்துள்ளது கட்டணங்கள் பெருமளவில் உயர்ந்துள்ளது. விவசாயம், கைத்தொழில் உட்பட சகல துறைகளும் இதனால் பாதிப்படைந்துள்ளது உடன் தலையிட்டு எரிபொருள் கிடைக்க நடவடிக்கை எடுக்கவும்." (க)

## "தமிழ் மாணவர் கல்வி திட்டமிட்டு ஒதுக்கப்படுகிறது"

(யாழ்ப்பாணம்)

தமிழ்ப்பேசும் மாணவர்களின் கல்வியையும் சிந்தனையையும் அரசு திட்டமிட்டு ஒடுக்குகின்றது. இதனை முறியடிக்க மாணவர்களாகிய நாம் ஒன்றிணைந்து ஒரே அமைப்பில் அணிதிரள்வது அவசியமாகின்றது".

ஐக்கிய மாணவர்பேரவை வெளியிட்டுள்ள துண்டுப்பிரசுரத்தில் மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது. அத்துண்டுபிரசுரத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

"தமிழ் பேசும் மாணவர்கள் மீது தரப்படுத்தல் போன்ற நடவடிக்கைகளால் ஏற்கனவே ஒடுக்குமுறைகளை மேற்கொண்டுவரும் சிறீலங்கா அரசு இன்று உச்சக்கட்டமான ஒடுக்குமுறைகளை ஏவிவிட்டுள்ளது.

"பாடசாலைகள் முகாம்களாக மாற்றப்படுகின்றன அல்லது அட்டூழியத்தால் அகதி முகாம்களாக மாறுகின்றன.

"மாணவர் தமது போராட்டங்களை முன்னெடுக்க முடியாது சகல கதவுகளும் மூடப்பட்டுவிட்டன. அகிம்சைப் போராட்டங்களான ஊர்வலம், உண்ணாவிரதம், ஹர்த்தால் செய்யும் உரிமைகள் கூட சட்டரீதியாக பறித்தெடுக்கப்பட்டுவிட்டன.

"அண்மையில் வல்வெட்டித்துறையில் மாணவர்கள் உட்பட 25 இற்கும் மேற்பட்டோர் நூல்நிலையத்துள் அடைக்கப்பட்டு குண்டு வைத்து தகர்க்கப்பட்டனர். மற்றும் மாணவர்கள், ஆசிரியர்கள் பெண்கள் உட்பட பலர் கைகள் கட்டப்பட்ட நிலையிலும் கொலை செய்யப்பட்டனர். மேலும் பல பாடசாலை மாணவிகளும், பெண்களும் தசை வெறிக்கு பலியாக்கப்பட்டனர் நெடுந்தீவில் படகில் சென்று கொண்டிருந்த 3 வயதுக் குழந்தை, இளைஞர்கள், பெண்கள் உட்பட 36 இற்கும் மேற்பட்ட அப்பாவி மக்கள் நடுக்கடலில் வைத்து கத்தி, கோடரி போன்றவற்றால் வெட்டப்பட்டுகோரமாகக்கொலை செய்யப்பட்டனர். (மா - க)

## றமழான் சிந்தனை

நாம் அல்லாஹ்வை நம்புகின்றோம். ஆனால் அவனுக்கு மாற்றம் செய்கிறோம். இறுதி நபியை அறிந்திருக்கின்றோம் ஆனால் அவர் சொற்படி வழிமுறைப்படி நாம்நடப்பதில்லை. குர்ஆனை அறிந்திருக்கிறோம். அதை அழகாக ஓதுகின்றோம். ஆனால் அது காட்டும் வாழ்க்கை முறையை, வழிமுறையை நாம் பின்பற்றுவதில்லை. அல்லாஹ் நம்மீது சொரிந்திருக்கும் அருள்மாரிகளை அனுபவிக்கின்றோம் ஆனால் அதற்காக நாம் அவர்களுக்கு நன்றி செலுத்துவதில்லை. நல்லமல்கள் செய்தால் சுவர்க்கம் இது நாம்அறிந்தது. ஆனால் அதற்காக நாம் ஆயத்தம் செய்வதில்லை. பாவிகளுக்கு நரகம் நாம் அறிந்தது ஆனால் அந்நரகத்திலிருந்து நம்மைநாம் காப்பாற்றிக்கொள்ள முயலுவதில்லை. அதற்கு பயப்படுவதில்லை. நமது தந்தையர்களுக்கும், மூதாதையர்களுக்கும் என்ன நடந்தது என்பது நமக்குத் தெரியும். நாம் சீர் திருந்துவதில்லை. பிறர் குற்றங்களை துருவித்துருவி ஆராய்கின்றோம் நமது குற்றங்களை நாம் ஆராய்வதில்லை. நாம் நம்மைப் படைத்த இறைவனுக்கு நன்றி செலுத்த வேண்டும். ஏன் வானிலிருந்து கல்மாரி! பூமியின் உள்ளிழுப்பு, வானிலிருந்து கல்மாரி இவைகள் நமக்கு ஏற்படாமல் செய்தான் என்பதற்காக.

தொகுப்பு: அ. க. அக்பரி ஜின்னா

★ பாடசாலைக்கு விஜயம் செய்த

## கல்வி அதிகாரிக்கு ஏற்பட்ட அதிர்ச்சி!

(கரவெட்டி)

கோப்பாய் கல்வி வட்டாரத்திலுள்ள ஒரு பாடசாலைக்குத் திடீர் விஜயத்தை மேற்கொண்ட வட்டாரக் கல்வி அதிகாரி திரு ஏ. வி. தங்கராஜா அங்கு கணிதம் கற்பிக்கும் ஆசிரியர் போதிய ஆயத்தமின்றியும், இம்முறை க. பொ. த. சாதாரண பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் அப்பியாசக் கொப்பிகள் சரியானமுறையில் பார்வையிடப்படாமலும், திருத்தப்படாமலும் இருப்பதைக் கண்டு அதிர்ச்சியும் கவலையும் அடைந்தார்.

இதையடுத்து அங்கு இடம்பெற்ற ஆசிரியர்கள் கூட்டத்தில் அவர் உரையாற்றுகையில், "இன்று ஆசிரியர்களுக்குப் போதிய சம்பளம் வழங்கப்படுகிறது. ஆகவே ஆசிரியர்கள் தங்கள் கடமைகளைச் சரிவரச் செய்வதேயன்றிப் பாடசாலை நிர்வாகத்தில் அநாவசியமின்றித் தலையிடுதல் கல்விக்குக் குந்தகம் விளைவிப்பதாக அமையும். இன்றைய நெருக்கடியான காலகட்டத்தில்ஆசிரியர்கள் தங்கள் கடமைகளைச் சரிவரச் செய்தால் நமது எதிர்காலச் சமுதாயம் கல்வியறிவு

(5-ம் பக்கம் பார்க்க)

# பாகிஸ்தான் ஜனாதிபதி ஸியா பங்களாதேஷுக்கு விஜயம் செய்வார்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் ஜனாதிபதி ஸியாவுல்ஹக் பங்களாதேஷுக்கு விஜயஞ்செய்து புயலினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிடவுள்ளார்.

பங்களாதேஷிக்கு அவர் விரைவில் விஜயம்செய்து அந்த நாட்டு ஜனாதிபதி எர்ஷாட்டுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். அதன் பின்னர் சூறாவளியினாலும், வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பல கிராமங்களையும் தீவுகளையும் பாகிஸ்தான் ஜனாதிபதி ஸியாவுல்ஹக் பார்வையிட்டு அந்த மக்களுக்கு தமது ஆறுதலையும், அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்வார்.

1971-ம் ஆண்டு பாகிஸ்தானிலிருந்து பங்களாதேஷ் பிரிந்து தனி நாடானது குறிப்பிடத்தக்கது.

## மோட்டார் சைக்கிள் கடத்தல்

(வவனியா)

வவனியா பிரஜைகள் குழுவைச் சேர்ந்த முக்கிய பிரமுகர் ஒருவரின் மோட்டார் சைக்கிள் இனந்தெரியாதவர்களால் அவரின் இறம்பைக்குளம் இல்லத்தில் வைத்து கடத்திச் செல்லப்பட்டுள்ளது.

## திருமலையிலிருந்து புறப்பட்ட பஸ் மீது தாக்குதல்!

(திருகோணமலை)

திருகோணமலையிலிருந்து நேற்று முன் தினம் காலை 7-00 மணியளவில் புறப்பட்ட பஸ் ஒன்றுபத்தாம்கட்டைவேப்பங்குளம் என்ற இடத்தில் வழிமறிக்கப்பட்டு தாக்குதலுக்குள்ளானதாகத் தெரிய வருகின்றது.

பஸ்ஸில் சுமார் 70 பிரயாணிகளிருந்ததாகவும் இந்தபஸ் பருத்தித்துறை டிப்போவைச் சேர்ந்தது என்றும் கூறப்படுகின்றது.

பிரயாணிகள் மோசமான தாக்குதலுக்குள்ளானதில் 20 பேர்வரை பலியாகியிருக்கலாம் என்றும், பலர் காயமுற்றதாகவும் அஞ்சப்படுகின்றது. காயமுற்றவர்கள் திருகோணமலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தாக்குதலையடுத்து காயமுற்றவர்களைத்தவிர்ந்த ஏனைய பிரயாணிகள் காட்டுக்குள் ஓடிவிட்டதாகவும் கூறப்படுகின்றது

### கிளிவெட்டியில்

கிளிவெட்டியில் அண்மையில் நடந்த சம்பவங்களையடுத்து ஏராளமான மக்கள் வெளியேறிவிட்டதால் காலியான பல வீடுகள் எரிக்கப்பட்டுவிட்டதாகக் கூறப்படுகின்றது. சுமார் 40க்கு மேற்பட்ட வீடுகள் இவ்வாறு எரிக்கப்பட்டுள்ளனவாம்.

## முல்லைத்தீவில் தேங்காய்கள் குவிகின்றன

(வவனியா)

முல்லைத்தீவிலிருந்து வவனியாவுக்கு தேங்காய்கள் வந்து குவிகின்றன. தென்பகுதியிலிருந்தும் வேறு பொருட்கள் இங்கு வருகின்றன.

## பேசாலை கொலை வழக்கு; எதிரி பிணையில் செல்ல அனுமதி

[வவனியா]

மன்னார்நீதிமன்றத்தில் விசாரணைசெய்யப்படும் பேசாலை சந்தியா எமிலியஸ் லோகு கொலைவழக்கில் எதிரியான தலைமன்னாரைச் சேர்ந்த அருளப்பு மத்தியாஸ் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட பிணைமனு வவனியா மேல் நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

எதிரியை 5 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல வவனியா மேல் நீதிமன்ற நீதிபதி திரு. எஸ் ஆனந்தகுமாரசாமி அனுமதி வழங்கியுள்ளார்.

எதிரி சார்பில் சட்டத்தரணி கனகமனோகரன் ஆஜரானார்.

அரசதரப்பில் அரச சட்டத்தரணி திரு. எஸ். சிறீஸ்கந்தராஜா ஆஜரானார். (க)

## விசர்நாய்க்கடி தடுப்பூசி மருந்துக்கு தட்டுப்பாடு!

(பண்டத்தரிப்பு)

யாழ் மாவட்டத்திலுள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் விசர்நாய்க்கடி தடுப்புஊசி மருந்துக்கு பலத்த தட்டுப்பாடு நிலவிவருகின்றது.

யாழ் அரசாங்க வைத்தியசாலையிலும் ஏனைய வைத்தியசாலைகளிலும் ஏ. ஆர். வி. என்று அழைக்கப்படும் விசர்நாய்க்கடி தடுப்பு ஊசி மருந்து கையிருப்பில் இல்லாதிருப்பதால் விசர்நாய்க்கடிக்கு இலக்கான நோயாளர்கள் பெரும் உயிராபத்தை எதிர்நோக்க வேண்டிய பரிதாப நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். மாவட்டத்திற்கு இந்த 'ஏ. ஆர்., வி.' எனப்படும் விசர்நாய்க்கடி தடுப்பு ஊசி மருந்துகளை விரைவில் அனுப்பிவைக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வட்டுக்கோட்டை லயன்ஸ்கழகத் தலைவர் டாக்டர் ரி. பகீரதன் கொழும்பிலுள்ள சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகத்துக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் கோரிக்கை விடுத்துள்ளார்.

## இன்றைய பலன்

வைகாசி 23 (1985-6-5)
புதன்கிழமை
திதி- துதியை காலை 6-17ன் மேல் திருதியை
நட்சத்திரம்- பூராடம் பின் இரவுவரை.

மேடம்- எண்ணியது எண்ணியபடி இன்று நடக்கும். உத்தியோகத்தர்களாயின் நிர்வாகத் திறமையில் முதலிடம் பெறுவார்கள்.

இடபம்- பகைமூட்டத்தின் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள். சிறிய விடயத்திற்குக்கூடக் குறை கேட்க நேரிடும். துயர்படிந்ததினம்.

மிதுனம்- காதல் விவகாரங்கள் தலைதூக்கும். இனிமையான சம்பவங்களி இடம் பெறும். களஸ்திரவழியால் பொருள் வரவிற்கு இடம் உண்டு

கடகம்- எக்கருமத்தையும் எண்ணித்துணிக. அவசரப் போக்கினால் அருமையான சந்தர்ப்பத்தைக் கோட்டைவிடக் கூடும் நிதானம் வேண்டும்.

சிங்கம்- பெரியவர் ஒருவரின் ஆதரவு கிடைக்கும். தெய்வத்தின் அருளும் வேண்டும். பிதாவழிச்சுகமும் உண்டு.

கன்னி- சுகபோகதினம். சொகுசான வாழ்க்கையையே விரும்புவீர்கள். படித்தவர்களின் தொடர்பால் பயனடைவீர்கள்.

துலாம்- இதயத்தில்இனிமை துள்ளும். பகைவர்கள் டணிவர். வணிகர்களுக்கு வியாபார விருத்தியுமுண்டு.

விருச்சிகம்: பாதையில் பழுதுண்டு. பகைவர்கள் காத்திருப்பர். செலவினங்கள் அளவுக்கு மிஞ்சியதாகவே இருக்கும். சிலருக்கு உடல்நலமும் பாதிக்கப்படலாம்

தனுசு- எதிலும் விரக்தி மனப்பான்மை உருவாகும் எதிர்பார்த்த முடிவுகளில் ஏமாற்றம் உருவாகலாம், உடல்நலமும் பாதிக்கப்படும்.

மகரம்- எண்ணம் போல் வாழ்வு மலரும் சமூகத்தில் மதிப்பு உயரும். வாகனச் சொந்தக்காரர்களுக்கு முன்னேற்றமுண்டு.

கும்பம்- பிரிவின் தாக்கதல் வேதனையைத்தரும். தொழில் துறையில் பின்தங்க நேரிடும். சிலர் வாழ்க்கையில் அவப் பெயருக்கும் இடமுண்டு.

மீனம்- மாதுருவழிப் பெருமைக்கும் இடமுண்டு. மனம் போல் யாவும் நடக்கும். இன்று கல்வியில் சிறப்பும் உறவினர் கொண்டாட்டமும் உண்டு.

திருமலை
வே. ரவீந்திரன்

## "உரையாடலின் பின் சூட்டுச் சத்தம் கேட்டது"

(கரவெட்டி)

"அங்கு சென்றவர்கள் கந்தவனநாதனுடன் ஏதோ கதைக்கும் சத்தம் கேட்டது. நான் உற்றுக்கேட்டேன் இந்த உரையாடல் கேட்ட சற்று நேரத்துக்குள் துப்பாக்கி வேட்டுகளின் சத்தங்கள் கேட்டன"

இவ்வாறு அண்மையில் வடமாராட்சிப் பகுதியில் இடம் பெற்ற அசம்பாவிதங்களின் போது நவிண்டிலில் மரணமான கரணவாய் பொன்னம்பல வித்தியாலய ஆசிரியர்திரு. சின்னத்தம்பி கந்தவனநாதன், த. விஸ்வநாதன் ஆகியோரின் மரண விசரணையில் சாட்சியமளித்த அயலவர் ஒருவர் தெரிவித்தார்.

பருத்தித்துறை நீதவான் திரு. கே. கணபதிப்பிள்ளை முன்னிலையில் நடைபெற்ற இவ்விசாரணையில் சாட்சிகளை கிராமசேவை உத்தியோகத்தர் திரு. பொ. மாணிக்கவாசகர் நெறிப்படுத்தினார்.

சாட்சியத்தின் போது மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

'சம்பவதினம் நான் வீட்டில் இருந்தேன். காலை 8 மணியளவில் எங்கள் வீட்டின் முன்பாக உள்ள உடுப்பிட்டி வீதியில் சீருடையினர் நிறைந்து வீடு வீடாகப் புகுந்து, தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்

'என் வீட்டுக்குள் வந்தபோது நான் எனது அடையாள அட்டையைக் காட்டி, இளைப்பாறிய கடற்படை உத்தியோகத்தர் எனவும் அறிமுகம் செய்தேன்'

''என்னை வீட்டுக்குள் இருக்கும் படியும் வெளியில் வர வேண்டாம் எனவும்அங்குவந்தவர்களில் ஒருவன் கூறினான்''

நானும் அதன்படி வீட்டினுள் சென்று விட்டேன் அவர்களும் அடுத்த வீட்டினுள் (கந்தவனநாதனின் வீடு) சென்றனர்.

இது நடைபெற்ற சற்று நேரத்தில் சீருடையினர் வந்து கந்தவனநாதனின் வீட்டைக் காட்டி, அந்த வீட்டில் வசிப்பவர்கள் பற்றி என்னைக் கேட்டனர்.

நான் இருவர் பற்றியும் சொன்னேன். இவற்றைக் கேட்ட பின் என்னை மறுபடியும் வீட்டிற்குள் போய் கதவைப் பூட்டிக் கொண்டு இருக்கும்படி கூறினார்கள் கூறினார்கள் பயம் காரணமாக நான் வீட்டினுள் இருந்தேன்.

10, 11, மணியளவில் அவர்கள் சென்றபின், வெளியில் வந்து துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்ட இடத்தைப் போய் பார்த்தபோது கந்தவனநாதனும், விஸ்வநாதனும் இரத்த வெள்ளத்தில் கிடக்கக் கண்டேன். அயலவர்களும் கூடினர்'' மேல் விசாரணை பின் போடப்பட்டது.


COLOMBO / BERLIN

உடனடியாகச்
செல்ல விரும்புவோர்
தாமதமின்றித் தொடர்பு
கொள்ளுங்கள்

யாழ்ப்பாணத்திலிருந்தே பயணத்திற்கான சகல ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.

பணத்தை கொழும்புக்கு எடுத்துச் செல்ல வேண்டிய தேவை உங்களுக்கிராது யாழ்ப்பாணத்திலேயே ஒழுங்குகளெல்லாம் பூர்த்தியாகும்.

கட்டுநாயக்கா விமான நிலையம்வரை பல்வேறு வசதிகளையும், உதவிகளையும் நாம் செய்து தருவோம்.

குறைந்த கட்டணங்கள், துரிதமான ஒழுங்குகள்,
நம்பிக்கை வாய்ந்த சேவை:
இவற்றுக்கு பிரசித்திபெற்ற பெயர்—

MACK TRAVELS LTD.

இல. 8, முதலாவது ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24791

Dyn. Ads



ரெருசோ ஷிப்ஸ்

TERRAZZO CHIPS

IMPORTED

★ கலர் பவுடர் (எல்லா வர்ணங்கள்) (GERMAN AND HOLAND)
★ அலுமினியம் தகடுகள் (18g x 16g)
★ வெள்ளைச் சீமெந்து
★ காபரண்டம் கற்கள் (FLOOR CUTTING STONE)
★ TERRAZZO மற்றும் தரைக்குத் தேவையான சகல பொருட்களும் கிடைக்குமிடம்

Rs. 6/75-க்கு மேல்

றம்சன்ஸ்

443, பழைய சோனகத் தெரு,
கொழும்பு-12
தொலைபேசி: 34411 — 31511

**மொடேர்ண் மினி சினிமா**
[ஸ்ரீலங்கா அச்சக லேன் ராஜா தியேட்டருக்கு அருகாமை]
**TERROR**
கண்டிப்பாக வயதுவந்தவர்களுக்கு மட்டும்.

**ராஜா தியேட்டர்**
யாழ்ப்பாணம்
தினசரி 10-30, 2-30
கமலஹாசன்-ஜெயப்பிரதா
**சலங்கை ஒலி**
கடைசிவாரம்

**லதா மினி**
(கோண்டாவில்)
ராஜேஷ்-சுபத்ரா-ரஜனிகாந்த்
'சித்திரமேசித்திரமே'
10-30, 2-00, 4-00

**S. T. L. மினிசினிமா**
(திருநெல்வேலி)
காட்சி: 10-30, பி.ப.2-15, 4-30
**TERROR**
இதுவரை யாழ் நகரில் திரையிடப்பட்ட அனைத்துப் படங்களைக்காட்டிலும் முற்றிலும் பாலியல் காட்சிகள் நிறைந்தபடம். எக்காரணம் கொண்டும் 18 வயதுக்குட்பட்டோர் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

**ஸ்ரான்லி மினி**
5'X5' திரையில்
மோகன், ரேவதி, கவுண்டமணி நடித்த
"உதய கீதம்"
10-30 மட்டும்
"DIVINE EMMANUEL"
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)
முதல்தரமான பிரதி
2-30, 4-30 மட்டும்

**லிடோ சினிமா**
சுதாகர் - ராதிகா நடித்த
**ஆயிரம் வாசல் இதயம்**
(ஈஸ்மன்கலர்புதியகொப்பி)

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
10-30, 2.30
பாக்கியராஜ் - சரிதா நடித்த
**மௌன கீதங்கள்**
(ஈஸ்மன் கலர்)
புதிய கொப்பி

**ஆனந்தி வீடியோ சினிமா**
(மனோகராவில்)
தினசரி 10-30 2-30
எம்.ஜி.ஆர் - K R. விஜயா நடித்த
**பணம் படைத்தவன்**

**ஹரன் சினிமா**
தினசரி 10-30 — 2-30
250 நாட்களுக்குமேல் காட்சியளித்த வெற்றிச் சித்திரம்
மோகன் - பூர்ணிமா
**விதி**
(கலர்)

## நூலகப்பயிற்சி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை நூலகச் சங்கத்தின் நூலகவியற் விஞ்ஞானப் பயிற்சி நெறி எதிர்வரும் சனிக்கிழமை யாழ். தொழில் நுட்பக் கல்லூரியில் ஆரம்பமாகிறது.

நூலகச் சங்கச் செயலாளர் திரு ஜே. வி. பெர்ணண்டோ இப்பயிற்சியை ஆரம்பித்து வைக்க ஆரம்ப விரிவுரைத் தொடரை செல்வி தேவகி கந்தையா நிகழ்த்துவார். (அ)

## சர்வோதயத் தொண்டர்கள் உதவி

(வவனியா)

அநுராதபுரத்திலிருந்து வந்து வவனியா ஓமந்தை அகதிமுகாமில் தங்கியுள்ள அகதிகளின் நலனைக் கவனிப்பதில் வவனியா சர்வோதய தொண்டர்களும் ஈடுபட்டுள்ளார்கள் என இணைப்பாளர் திரு. க. கதிரமலை கூறினார்.

ஓமந்தை முகாமில் அநுராதபுர அகதிகளில் 18குடும்பங்களை சேர்ந்த 66 பேர் தங்கியுள்ளார்கள் என்பது குறிப்பிடதக்கது.

## வெட்டிக் கொலை!

(கிளிநொச்சி)

இரவு வேளை ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த 50 வயது நபரொருவர் வெட்டுக்காயங்களுடன் கொலையுண்டு கிடந்த சம்பவம் கிளிநொச்சி திருநகரில் கனகபுரம் வீதியில் இடம்பெற்றுள்ளது.

இக் கொலைக்கான காரணம் என்னவென்றோ அல்லது கொலையைச் செய்தவர்கள் யாரென்றோ மரணமானவரின் உறவினர்களுக்கு தெரியாதென கிளிநொச்சி கிராம சேவையாளர் எஸ் சனபாலசிங்கத்திடம் உறவினர்கள் முறையிட்டுள்ளனர்.

மரண விசாரணைக்கான ஏற்பாடுகளை கிராம சேவையாளர் திரு. தனபாலசிங்கம் செய்துள்ளார்.

**யாழ். வின்ஸர் மினி**
தினசரி 10-30, 2-30
விஜயகாந், ஜோதி, வனிதா, கவுண்டாமணி, சத்தியராஜ் நடித்த
**ராமன் ஸ்ரீராமன்**
இறுதிவரை மர்மம், திகில் நிறைந்த வண்ண ஓவியம்.
புதிய வெளியீடு

**வின்ஸர்**
தினசரி 10-30, 2-00, 4-15
Jerome, Susan
in
SURVIVAL RUN

**சிவன் மினி சினிமா**
K K. S. றோட் சிவன் கோயிலடி சந்திக்கு முன்பாக
5 6-85 முதல்
10 30 2-30
A V PAIR GIRL
கண்டிப்பாக 18 வயதுக்குட்பட்டவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள் 4 அடித் திரையில் காண்பிக்கப்படுகிறது.

**நியூசாந்தி (மினி)**
யாழ் சாந்தி சினிமாவில்
10-30 A. M Only
Rajanikanth,
Amitha[illegible]ach[illegible]n
"ANDHO K NOON"
(Hindi
Eastman color
சண்டைகள் நிறைந்தபடம்
2-15, 4-15 P M
Charles Bronson
'MR MA ESTIC'
Action Packed

## ஓய்வுபெற்ற அதிபர் கந்தையா

கீரிமலை நகுலேஸ்வர மகா வித்தியாலயத்தின் சிற்பியும், முன்னாள் அதிபருமான வ. கந்தையாவின் மறைவு அவர் சார்ந்த வட்டாரத்தின் இழப்பாகும். அவர் ஆற்றிய அளப்பரிய சேவைபற்றி அங்கு இடம்பெற்ற இரங்கலுரைகளிலிருந்து தெளிவாகப் புலப்பட்டது.

இளைப்பாறிய கிராமசேவகர் திரு. சு. கனகசபையின் தலைமையில் பின்வருவோர் இரங்கலுரை நிகழ்த்தினர் முன்னாள் அதிபர்கள் திருவாளர்கள் ஆ. இராமசாமி, செ சிவசுப்பிரமணியம், கா. கதிர்காமத்தம்பி, க. நவரத்தினம் சி. பொன்னையா, அதிபர்கள்: இரா. சண்முகரத்தினம், மு. சிவராசரத்தினம், செ. வரதராசப்பெருமாள், சி. அப்புத்துரை, சு. செல்லத்துரை ஆசிரியர்கள்: திரு சு. தேவதாசன், கீரிமலைப் பிரஜைகள் குழுத் தலைவர் திரு க. சுந்தரமூர்த்தி, தெல்லிப்பழை ப நோ கூ. சங்கத் தலைவர் திரு சி. சிவமகாராசா, ஆசிரியர் சங்கச் செயலாளர் திரு. க. சுப்பிரமணியம், மயிலங்கூடலூர் பி. நடராஜன், பண்டிதர் க. நாகலிங்கம்.

அன்னாரது பூதவுடல் ஊர்வலமாகக் கருகம்பனை வீதியூடாக நகுலேஸ்வர மகா வித்தியாலயத்திற்கு கொண்டுவரப்பட்டுஅஞ்சலிக்காக வைக்கப்பட்டது. அங்கே வித்தியாலய அதிபர் திருமதி த. இராமசாமியின் தலைமையில் பிரதி அதிபர் திரு. கந்தையா, ஆசிரியர் திரு கா. சரவணமுத்து, ஆசிரியை திருமதி ப. பார்வதி நாதசிவம், பழையமாணவன் செல்வன் த முரளீதரன், வித்தியாலய மாணவி செல்வி நா. சிவஞானசரஸ்வதி என்போரும் நலன் விரும்பிகள் சார்பில் திரு இ நரசிங்கமும் அஞ்சலிஉரை நிகழ்த்தினர்.

த. இராமசாமி

## ஆங்கில இலக்கியத்துக்கு அளப்பரிய நட்டம்

(லண்டன்)

ஆங்கில இலக்கிய மேதையும் கேம்பிறிட்ஜில் 'ஷேக்ஸ்பியர் பரிசு' பெற்று ஆங்கில அறிஞர்களையே வியக்கவைத்த பேராசிரியர் ஈ. எவ். சி லுடொவைக் (E F C. Ludowyke) சிறு காலம் நோயுற்றிருந்து லண்டன் ஆஸ்பத்திரி ஒன்றில் கடந்த சனிக்கிழமை காலமானார். இவருக்கு வயது 78.

நீண்டகாலம் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் ஆங்கில பீடாதிபதியாக இருந்து பல மாணவர்களை — தமிழர் உட்பட — இத்துறையில் சிறக்க வைத்த பெருமை இவருக்கு உண்டு. நாடகத்துறையில் குறிப்பாக சிங்கள நாடகத்தை ஆங்கில முறையில் நவீனப்படுத்தி பல நாடகங்களை மேடையேற்றினார்.

'ஷேக்ஸ்பியர் விமர்சனம்' என்ற சிறந்த நூலை உலகுக்கு உதவியது குறிப்பிடத்தக்கது.

## க. பொ. த. உயர்தர பரீட்சை அச்சுவேலியிலும் பரீட்சை நிலையம்

(கரவெட்டி)

இவ்வாண்டு ஆகஸ்ட்மாதம் நடைபெறவுள்ள க பொ த. உயர்தர பரீட்சையை அச்சுவேலிப்பகுதி மாணவர்களுக்காக அச்சுவேலியிலும் ஒரு நிலையம் அமைத்து நடத்துவதற்கு கல்வித் திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளது.

இப்பகுதிப் பெற்றோர் அதிபர்கள் கல்விமான்களால் நீண்டகாலமாக எழுப்பப்பட்டுவந்த இக்கோரிக்கையை யாழ். கல்வித்திணைக்களம் பரிசிலனை செய்து அச்சுவேலி சென் திரேஸா மகளிர்பாடசாலையை பரீட்சை நிலையமாக நியமித்துள்ளது. இதற்காக இப்பகுதி பெற்றோர், ஆசிரியர்கள் சார்பில் யாழ் கல்விப்பணிப்பாளர் திரு. எம். சிமியாம்பிள்ளை, யாழ். பிரதமகல்வி அதிகாரி திரு வெ. சபாநாயகம் ஆகியோருக்கு கோப்பாய்வட்டாரக் கல்வியதிகாரி திரு. ஏ வி. தங்கராஜா நன்றி தெரிவித்துள்ளார்.

## தொண்டமானாறு வெளிக்களநிலைய பரீட்சை ஜூலை ஆரம்பம்

### கல்வித் திணைக்களம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும் ஆண்டு 13ம் வகுப்பிற்கான கணித, விஞ்ஞான, கலை, வர்த்தகப்பாடங்களிற்கான பரீட்சை ஜூலை 2ம் திகதி நாடு பூராவும் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இப் பரீட்சைக்கான சகல சுற்று நிருபங்களையும் தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நாட்டில் உள்ள சகல தமிழ் மொழிப் பாடசாலைகட்கும் அனுப்பி வைத்துள்ளதாகவும் நிலையச் செயலாளர் திரு. சுவாமிநதன் நமது நிருபரிடம் தெரிவிததார்.

ஆண்டு ஏழு முதல் பதினொன்று வரையிலான வகுப்புகளுக்கான கணித விஞ்ஞான பரீட்சைகள் ஜூலை இறுதி வாரத்தில் நடைபெறும் என்றும் இது தொடர்பான விரிவான சுற்று நிருபங்களும் நாட்டில் உள்ள சகல தமிழ் மொழிப் பாடசாலைகட்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் வெளிக்கள நிலையச் செயலாளர் தெரிவித்துள்ளார். 12ஆம் வகுப்பிற்கான பரீட்சைகள் இரண்டாம் தவணை முடிவில் நடைபெற மாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொண்டமானாறு வெளிகள நிலையத்தை இராணுவம் பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர் அச்சுவேலி இடைக்காடுப் பகுதியில் உள்ள ஒரு தனியார் கட்டிடத்தில் 'தொண்டமானாறு வெளிக்கள நிலையம்' தொடர்ந்து இயங்கிவருவது குறிப்பிடததக்கது.

## நெடுந்தீவு படுகொலை சம்பவம்: கிளிநொச்சி பிரஜைகள்குழு பலத்த கண்டனம்

[கிளிநொச்சி நிருபர்]

நெடுந்தீவுக் கடலில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவத்திற்கு ஆழ்ந்த கவலையையும் வன்மையான கண்டனத்தையும் தெரிவிக்கும் தீர்மானமொன்று கிளிநொச்சி பிரஜைகள் குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது

கிளிநொச்சி பிரஜைகள் குழுவின் வாராந்தக் கூட்டம புனித திரேசாள் ஆலயத்தில் திரு ம சூசைபபிள்ளை தலைமையில் நடைபெற்றது.

நெடுந்தீவுக் கடலில் இடம்பெற்ற துக்ககரமான சம்பவத்திற்குக் கண்டனம் தெரிவிக்கும் தீர்மானம் டாக்டர் வி. கே திருலோகமூர்த்தியால் கொண்டுவரப்பட்டபோது பிரஜைகள் குழு உறுப்பினர்கள் மிகவும் உணர்ச்சிவசப்பட்டு தீர்மானத்தை ஆதரித்துப் பேசினார்கள்.

கிளிநொச்சிப் பிரஜைகள் குழுத் தலைவர் வண. பிதா ம இ பயஸ் அடிகளாரின் பாவனையிலுள்ள ஜீப் வண்டி இனம் தெரியாதவர்களால் கடததிச் செல்லப்பட்டமைக்கும், பல மாதமாகியும் மீண்டும் வண பிதாவிடம் ஒப்படைக்கப்படாமைக்கும் கவலை தெரிவிக்கும் தீர்மானமொன்று பிரஜைகள் குழுப் பொருளாளர் திரு ப வை. ஜெயபாலனால் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரஸ்தாப வாகனத்தை வைததிருப்போர் தியாக சிந்தையுடனும், பெருநோக்குடனும அவ்வாகனததை ஒப்படைக்கும றும் பிரஸ்தாப தீர்மானத்தில சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆயுர்வேத விஷக்கடிவைத்தியர் அ தாமோதரம்பிள்ளை, ஜனாப் அக்பர், திரு எஸ். கோபாலக சி ஆறுமுகம் ஆகியோரும் பிரஜைகளகுழுக் கூட்டத்தில் மேற்படி தீர்மானம் தொடர்பாக உரையாற்றினார்கள். (க)

## அபிவிருத்திச் சங்க நிர்வாகிகள்

[கல்வியங்காடு]

வண்ணை நாவலர் மகா வித்தியாலய அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் அதிபர் திரு சிவஞானசுப்பிரமணியம் தலைமையில அண்மையில் நடைபெறறது பின்வரும் நிர்வாகசபை அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: அதிபர் திரு ப சிவஞானசுப்பிரமணியம், உபதலைவர்: திரு V. கோபாலகிருஷ்ணன், இணைச் செயலாளர்கள்: திரு வி கே இராமசாமி, திரு சி இராஜமணி, பொருளாளர்: திரு. ஐ துரைராஜா, கணக்குப் பரிசோதகர், திரு V. ஹரிதாஸ்.

## மக்கள் குழு

(கரவெட்டி)

கரவெட்டி மேற்கு மக்கள் குழு அங்குரார்ப்பண வைபவம் அண்மையில் கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியில் நடைபெற்றது தலைவர் வி. எஸ் வீ சிஙகம், உபதலைவர் எம் வேதாரணிய, செயலாளர் ம வரதராஜன், உபசெயலாளர் எஸ் வன்னியசிங்கம், பொருளாளர் எஸ். பிரபாகரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

## கல்வி...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

றுப் பாழடிக்கப்படாமல் அமைய வழிவகுக்கப்படும் என்பதை உணர்ந்து கடமையாற்ற வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

# பன்குளம் பஸ் தாக்குதலில் 13 பேர் பலி; 9 பேருக்கு காயம்

(யாழ்ப்பாணம்)

பன்குளத்தில் நடந்த பஸ் தாக்குதல் சம்பவத்தில் பஸ் சாரதி உட்பட 13 பேர் பலியானார்கள் என்றும் 9 பேர் பலத்த காயமடைந்தனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது

13 பேரின் சடலங்களும் திருமலை ஆஸ்பத்திரிக்குக்கொண்டு செல்லப்பட்டு மரணவிசாரணை நடைபெற்றதாகக் கூறப்படுகிறது.

9 சடலங்களை நேற்று உறவினர்கள் பொறுப்பேற்றுக் கொண்டுசென்றனர் சாரதியின் சடலத்தை திருகோணமலை பஸ் டிப்போ மூலம் யாழ்ப்பாணம் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது சாரதியின் சடலத்துடன் யாழ்ப்பாணத்தை சேர்ந்த மற்றும் மூவரின் சடலங்களையும், அதே பஸ்ஸில் இங்கு கொண்டுவர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. பலியான மற்றொருவரின் சடலம் அவரின் சொந்த இடமான திருமலைக்குக் கொண்டுசெல்லப்பட்டது

இச்சம்பவத்தின்போது தப்பி காட்டுக்குள் சென்றவர்கள், நேற்று திருமலைக்குச் சென்று, அங்கிருந்து தங்கள் சொந்த இடங்களுக்குச் சென்று விட்டதாகக் கூறப்படுகிறது

திருமலையிலிருந்து நேற்று முன்தினம் 6-15 மணிக்கு, பருத்தித்துறைக்கு புறப்பட்ட பஸ் பன்குளத்தில் தாக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. (க)

## வவுனியாவில்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

அவ்வேண்டுகோளில் அவரி மேலும் தெரிவித்திருப்பதாவது: சோமரத்ன குடும்பம் தமிழர் மத்தியில் வாழ்ந்து வந்தவர்கள். அவர்கள் தமிழரின் விரோதிகளல்ல, அவர்கள் தமிழரின் நெருங்கிய நண்பர்கள். இதனால்தான் இங்கு பதட்டநிலை ஏற்பட்ட காலங்களிலும் தொடர்ந்து இங்கு வாழ்ந்துவந்தார். அவரையும் குடும்பத்தினரையும், உடன் விடுதலை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். (க)

## நெடுந்தீவு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இறந்தவர்களின் நலனைக் கவனிக்க சட்டத்தரணிகளான ஆர். ஈ. தம்பிரத்தினம், ஆர். விஸ்வநாதன், ஆர் ஆர் தங்கராசா, ஆர் பாலசுப்பிரமணியம், ரி. சோமசுந்தரம், வி. சிவநேசன், த. விஸ்வலிங்கம், க சிவசுப்பிரமணியம், மா, தியாகராசா ஆகியோர் ஆஜரானுர்கள்.

10 பேர் மொட்டையான ஆயுதத்தினல் தாக்கப்பட்டதாகவும், 4 பேர் மொட்டை ஆயுதத்தினலும் கூரான ஆயுதத்தினலும் தாக்கப்பட்டதாகவும், 4 பேர் தனிய கூரான ஆயுதத்தினல் தாக்கப்பட்டதாகவும், மொட்டை ஆயுதத்தினல் தாக்கப்பட்டவர்கள் குனிந்திருந்த நிலையில் தாக்கப்பட்டுள்ளதாகவும், வைத்திய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சட்டத்தின்முன் நிறுத்துக

தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது! இச்சம்பவத்தை யார் செய்தது என்பது சம்பந்தமாக 2 பேரின் சாட்சியத்தை ஆராயப்படவேண்டியுள்ளது. காயமடைந்த ஒருவர் தமது சாட்சியத்தில், தாக்குதல் நடத்திய ஒருவரை ஏற்கனவே நயினதீவு இறங்குதுறையில் கடமையில் இருப்பதை பார்த்திருப்பதாகவும், அந்த ரேரத்தில் சிலசமயம் சீருடையிலும், சில சமயம் சீருடையில்லாமலும் பார்த்திருப்பதாக கூறியிருக்கிறார் மற்றொருவர் தமது சாட்சியத்தில் 2பேரை தெரியுமென்றும், ஏற்கனவே கண்டிருப்பதாகவும் கூறியிருக்கிறார். ஆதலால் பொலிஸார் உடன் விசாரணை மேற்கொண்டு இச்சம்பவத்திற்கு பொறுப்பான நபர்களை சட்டத்தின்முன் நிறுத்துமாறு உத்தரவிடுகிறேன். (க)

## இரவல் நூல் பெற்றவர்களுக்கு ஒரு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர பொதுசன நூலகத்தில் இரவலாகப் பெற்று*சென்ற நூல்களை, நல்லூர் கிளை நூலகத்தில் ஒப்படைத்து தங்கள் அங்கத்தவர் அட்டையை பெற்றுக்கொள்ளுமாறு யாழ் மாநகரசபைஆணையாளர் திரு. சீ. வி. கே. சிவஞானம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (க)

## பாதையில் படுத்து பஸ்ஸை மறித்தார்களாம்

திருகோணமலை)

திருகோணமலையிலிருந்து நேற்று முன்தினம் காலை புறப்பட்ட பருத்தித்துறை டிப்போவைச்சேர்ந்த போக்குவரத்துச் சபை பஸ்வண்டி பத்தாம் கட்டையில் பன்குளத்தை அடைந்தபோது வீதியில் இருவர் படுத்திருந்ததாகவும் பஸ்ஸைக்கண்டதும் அவர்கள் ஆயுதங்களுடன் எழுந்து ஓடிவந்ததாகவும் கூறப்படுகின்றது பஸ்வேகம் குறைக்கப்பட்டதும் என்ஜின் நின்றுவிட்டது, ஓடிவந்தவர்களுடன் மேலும் ஆறு அல்லது ஏழுபேர் சேர்ந்துகொண்டனர். அவர்களிடம் ஆயுதங்கள் இருந்தன. பஸ்ஸிலிருந்த பிரயாணிகள் கூக்குரலிட்டனர். சிலர் தாங்கள் சிங்களவரென்றும் சிலர் முஸ்லிம்கள் என்றும் குரல் எழுப்பினர் பஸ் வேறு இடத்துக்குக் கொண்டுபோகப்பட்டது. சிங்களவரும் முஸ்லிம்களும் அடையாள அட்டைகளைப் பரிசோதித்த பின்னர் இறக்கிவிடப்பட்டு ஏனையவர்கள் மீது பயங்கரமாகதாக்குதல் நடத்தப்பட்டுள்ளது இச்சம்பவத்தின் போது சில பிரயாணிகள் காட்டுக்குள் ஓடிவிட்டதாகவும் கூறப்படுகிறது

## எரிபொருள் தட்டுப்பாட்டின் விளைவு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் கடமையாற்றும் நீதிச்சேவை உத்தியோகத்தர் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக நீதிமன்றத்திற்கு நடந்து சென்றுவருகின்றார்கள். எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக வைத்திய சேவை உத்தியோகத்தர்களும் ஆஸ்பத்திரிக்கு நடந்து செல்கின்றனர். (க)

## 36 பேருக்கு பிணை

[கொழும்பு]

நிக்கவரெட்டியா பொலிஸ் நிலையத் தாக்குதல் தொடர்பாகச் சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட 37 பேரில் 36 பேர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். ஒருவர் மாத்திரம் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

## மகாகும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

சுதுமலை ஸ்ரீ முருக மூர்த்தி கோயில் மகா கும்பாபிஷேகம் நாளை வியாழக்கிழமை நடைபெறும். தொடர்ந்து 45 நாட்கள் மண்டலாபிஷேகம் இடம் பெறும்.

## தனிமையில் வசித்துவந்த——

# மூதாட்டி கழுத்து நெரித்து கொலை!

(யாழ்ப்பாணம்)

நல்லூரில் தனிமையில் வசித்து வந்த 62 வயது மூதாட்டி தங்கபாக்கியம் கழுத்து நெரித்துக் கொலை செய்யப்பட்டார் இவரது சடலம் நிர்வாணமாக அவ்வீட்டில் இரத்த வெள்ளத்தில் காணப்பட்டது.

நல்லூரைச் சேர்ந்த கந்தையா கைம்பெண் திரேசம்மா அல்லது தங்கபாக்கியம் (62 வயது) என்ற மூதாட்டியின் மரணவிசாரணையில் மேற்கண்ட அதிர்ச்சித் தகவல் தெரியவந்தது

யாழ் மரணவிசாரணை அதிகாரி க. கேசவன் மரணவிசாரணை நடத்தினுர்.

இறந்தவரின் சடலம் அவ்வீட்டில் உள்ள அறையில் குப்புற நிர்வாணமாகக் கிடக்கக் காணப்பட்டது சடலம் சாக்கினலும் சீலையினலும் மூடப்பட்டிருந்தது நாக்கு வெளியில் இழுத்தபடி இரத்த வெள்ளத்தில் சடலம் காணப்பட்டது.

இம்மாதம் 28ம் திகதி காலை அவ்வீட்டின் கதவு பூட்டப்பட்டிருந்ததாகவும் இரவில் குளறிய சத்தம் கேட்டதாகவும், 'ஆமி' என்று பயந்து அயலவர் எவரும் அவ்வீட்டிற்கு செல்லவில்லை என்றும் விசாரணையில் கூறப்பட்டது. இறந்தவரின் 4 பிள்ளைகளும் வெளிநாட்டில் இருப்பதாகவும் கூறப்பட்டது.

மறுநாள் காலை நல்லூர் கிராம சேகவர் சண்முகலிங்கம் வீட்டின் முன் கதவை உடைத்துத் திறந்தபோது. இரத்தவெள்ளத்தில் சடலம் கிடந்ததாகக் கூறப்பட்டது

கழுத்து நெரிக்கப்பட்டிருந்ததாக வைத்திய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது இறந்தவரின் சகோதரன் தர்மலிங்கமும் சாட்சியமளித்தார்

மரணவிசாரணை அதிகாரி கொலை எனத் தீர்ப்பளித்து பொலிசாரை தொடர்ந்து புலன் விசாரணை நடத்துமாறு உத்தரவிட்டார். (க)

## பிற மாவட்டங்களிலிருந்து——

# டீசல், பெற்றோல் கொண்டுவர வாகனக்காரருக்கு அனுமதி

### ராணுவதளபதியுடன் கலந்து அரச அதிபர்ஏற்பாடு

[யாழ்ப்பாணம்]

யாழ் மாவட்டத்தில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாட்டை ஓரளவு தீர்க்கும் வகையில் பிறமாவட்டத்திலிருந்து 10 லீற்றர் பெற்றோல் அல்லது டீசல் கொண்டுவருவதற்கு வாகன உரிமையாளர்ளுக்கு அனுமதி வழங்கப்படவுள்ளது.

யாழ் மாவட்டச் செயலாளரும், அரச அதிபருமான திரு எம். பஞ்சலிங்கம், யாழ் மாவட்ட இணைப்பு அதிகாரி பிரிகேடியர் வணசிங்காவுடன் கலந்தாலோசித்ததின் பயனுக 3 கட்டுப்பாடுகளுக்கு அமைய இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஒரு வாகனச் சொந்தக்காரரினல் அல்லது அவரால் எழுத்துமூலம், அதிகாரம் அளிக்கப்பட்ட வேறு ஒருவரினல் பிறமாவட்டங்களிலிருந்து 10 லீற்றர் [2 கலன்] பெற்றோல் அல்லது டீசல் கொள்கலன் மூலம் கொண்டுவருவதற்கு அனுமதி வழங்கப்பட்டுளது

எரிபொருள் கொண்டுவருபவர், வாகனத்திற்குரிய 85ம் ஆண்டுக்கான வருமானவரி செலுத்திய உத்தரவுப்பத்திரத்தையும், பொலிஸ் அத்தியட்சகரினல் வாகன உடமைக்கும், பாவனைக்கும் வழங்கப்பட்ட பத்திரத்தையும், அவரின் தேசிய அடையாள அட்டையையும் வைத்திருத்தல் வேண்டும்.

இவ்விதம் எரிபொருள் கொண்டுவருவதற்கு எவ்வித தடையோ, கட்டுப்பாடோ, பாதுகாப்பு படையினரின் தடைமுகாம்களில் இருக்க மாட்டாது என பிரிகேடியர் உறுதியளித்திருக்கிறுர். (க)

## ரசாயனத்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விஞ்ஞான கைத்தொழில் அமைச்சர் திரு. டென்சில் பெர்ணுண்டோ நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்

இலங்கை தேசிய ரசாயனத் தொழிற்சாலை வருடாந்த அறிக்கை மீதான விவாதத்தில் அமைச்சர் பேசினுர்.

மேற்படி தொழிற்சாலை இயங்காது போனுலும் ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கப்படுவதாகவும் தற்போது அங்கு ராணுவம் இருந்து வருவதாகவும் அமைச்சர் சொன்னுர்.

இத்தொழிற்சாலையை நடத்த முடியாவிட்டால் புதிய தொழிற்சாலையொன்றை ஆரம்பிக்கலாம் என திரு. அணில்முனசிங்க தெரிவித்தபோது, அவ்வாறு செய்யதாம் உத்தேசித்திருப்பதாக அமைச்சர் சொன்னுர்.

தொழிற்சாலையில் ஒன்பதாயிரம் பேர் தொழில் செய்வதாகவும் அடிக்கடி தீவிரவாதிகள் தொழிற்சாலையில் கொள்ளையடித்து வருவதாலேயே தொழிற்சாலை தற்காலிகமாக மூடப்பட்டது என்றும் சொன்னுர்.

## கொழும்பு...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ஆயுதங்கள் வைத்திருந்த பெரும் கும்பல் வீதியில் நின்று மினிபஸ்ஸை நோக்கி கற்களால் வீசியதாகவும், பஸ் சாரதி சாதுரியமாகவும் வேகமாகவும் பஸ்ஸை செலுத்தி வந்துவிட்டதாகவும் பிரயாணி ஒருவர் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் காலை யாழ். நகரிலிருந்து புறப்பட்ட தனியார் பஸ் ஒன்றின் மீது மதவாச்சிக்கு சமீபத்தில் கற்கள் வீசப்பட்டதால் சாரதி தலையில் பலத்த காயமடைந்ததாகவும், இதனுல் அந்த பஸ்ஸ்தாபன சாரதிகள், வேலை செய்ய மறுத்துள்ளதாகவும் கூறப்படுகிறது. (க)

## இந்தியா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களை எடுத்துவரும் அதே வேளையில் மக்கள் எல்லோரும் பொறுமையுடன் இருக்க வேண்டும் என்றும் அரசாங்கம் எடுக்கும் இந்தநடவடிக்கை எமது வாழ்நாளின் போதே சமாதானத்தை ஏற்படுத்தவும், அப்பாவி மக்களின் கொலைகளை தடுப்பதற்கு உதவியாகவும் அமையும் என்றும் அவர் கூறினுர். (து)

## வீதியோரத்தில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

'எல்லையை மீறிச் செல்பவர்களுக்கு இக்கதிதான் நிகழும்' என்று அவ்வுருவங்களில் காணப்படும் அட்டைகளில் எழுதப்பட்டிருப்பதாகப் பிரயாணி ஒருவர் தெரிவித்துள்ளார். (மா)

## யாழ்-கொழும்பு...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

மிடத்தில்வைத்து கொழும்பிலிருந்துவந்த பஸ்பிரயாணிகள் தாக்குதலுக்குள்ளானதுடன் மேற்கொண்டு பிரயாணம் தொடரவிடாமல் திருப்பி விடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பஸ்ஸைப் பின் தொடர்ந்து வந்த மற்றைய பஸ்களும் கொழும்புக்கு மீண்டும் திரும்பிச் சென்றுவிட்டனவாம்

மேலும் இச்சம்பவம் தொடர்பாகப் பீதியடைந்த பஸ் உரிமையாளர்கள் யாழ்-கொழும்பு பஸ்போக்குவரத்து சேவையை தற்காலிமாக நிறுத்தி வைப்பதாகத் தெரிவிக்கின்றனர் (க—மா)


## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் செல்லத்துரை இராஜதுரை

பயிர்ச் செய்கை உத்தியோகத்தரும் முன்னுள் உடுவில் கிராமசபை உறுப்பினருமான ஆறுமுகம் செல்லத்துரை இராஜதுரை அகாலமரணமானுர். இவர் தாவடி செல்லததுரை நாகரத்தினம் தம்பதிகளின் மூத்த புதல்வரும், கொக்குவில் சின்னத்துரை- அன்னலட்சுமி தம்பதிகளின் மருமகனும், ரூபவதி சரோஜாவின் அன்புக்கணவரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் தாவடி மயானத்தில் இன்று புதன்கிழமை (5-6-85) பிற்பகல் 2 மணியளவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றுர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

செ. நடேசபிள்ளை, (சகோதரர்) — சி ஜெயபாலசிங்கம் (மைத்துனர்)

3634


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் கிறாசுவனத்தாரால் யாழ்ப்பாணம் இவன்கோவிக் மேற்கு வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1985ம் ஆண்டு ஜூன் மாதம் 5-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu PO Box 49 Telegram Eelanadu Tel-ph no: 22389-24126